உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 24 புதன்கிழமை (07.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 74

இலங்கைக்கு விசேட தூதரை நியமிக்குமாறு புஷ்ஷுக்கு 38 அமெ. எம்.பிக்கள் அழுத்தம்

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இதனை மேற்கொள்ளும்வேளை வந்துவிட்டதாம்

நியூயோர்க், பெப்ரவரி 07

இனப்பிரச்சினையால் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் இலங்கையில் சமாதானத்தை மீள ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு உதவி வழங்குவதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தமது விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும்.

அமெரிக்காவின் சட்டவாக்கல் அமைப்பான மக்கள் பிரதிநிதிகள் சபையின் 38 உறுப்பினர்கள் ஜனாதிபதி புஷ்ஷுக்கு கடந்த வாரம் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு கோரியிருக்கின்றனர்.

இலங்கையில் மீண்டும் வெடித்திருக்கும் வன்செயல்கள், அதிகரித்துவரும் படுகொலைகள், உயிரிழப்புகள் மற்றும் தீர்வு காணப்படாத கடத்தல்கள் என்பவற்றால் தாங்கள் பெரும் குழப்பமடைந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

நியூஜேர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த ஜனநாயகக்கட்சிப் பிரதிநிதியானருஷ் ஹோல்ட் என்பவரே இந்தக் கடிதத்தை ஜனாதிபதி புஷ்ஷுக்கு அனுப்புவதற்கான முன்முயற்சிகளை எடுத்து, அதனை ஏற்பாடு செய்தவர் எனக் கூறப்படுகின்றது.

''இலங்கை மக்களுக்கான சமதானம் மேம்பாடடைவதற்கு உதவும் விவாகாரத்தில் உலகத்தலைமையை அமெரிக்கா வழங்கும் வேளை வந்துவிட்டது.'' என்றும் அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

கட்சி சார்பின்றி - இரு பிரதான கட்சிகளான ஜனநாயக்கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகிய இரு தரப்புகளையும் சார்ந்த - எம்.பிக்கள் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்

(04ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் நிலைகள் மீது ஹெலிகள் றொக்கட் வீச்சு!

கொழும்பு, பெப். 7

திருகோணமலையின் வடக்குப் பகுதியில் - விடுதலைப் புலிகளின் மறைவிடங்கள் எனச் சந்தேகிக்கப்படும் காட்டுப் பகுதி மீது - நேற்று விமானப் படையின் ஹெலி கொப்டர்கள் றொக்கட் தாக்குதல்களை நடத்தின என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறினார்.

இதேவேளை -

திருகோணமலை மேற்குப் பகுதியில் கற்றுக்காவல் அணி மீது தாக்குதல் நடத்திய ஹெலிகளை நோக்கி தாக்குதல் நடத்தி விரட்டியதாகவும் -

நேற்றுக் காலை 8 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (அ-ஐ-1-வ)

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை சிதறடித்துவிட்டார் ஜனாதிபதி

நாடாளுமன்றில் ரணில் விசனம்

கொழும்பு, பெப்.7

''நாட்டில் நிரந்தரமான ஒரு சமாதானத்தையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்கு இடப்பட்ட அத்திபாரத்தை ஜனாதிபதியின் தன்னிச்சையான செயற்பாடுகள் அடியோடு தகர்த்துவிட்டன. ஜனாதிபதியின் நடவடிக்கை பிரதான இரு கட்சிகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்ய வைத்தது மட்டுமல்லாமல், நாட்டின் நல்ல ஒரு எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது.''

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சபையில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார். அப்போதே அவர் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

தேசத்தின் நலன், அபிவிருத்தி, நாட்டு மக்கள் மத்தியில் நிரந்தரமான சமாதானம், நிலையான நல்லாட்சி என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே ஐக்கிய தேசியக்கட்சி ஆளுங் கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது.

நமது நாடு சுதந்திரம் அடைந்த 59 வருட காலத்தில் இதுவரை என்றுமே இல்லாத ஒரு சிறப்பு அம்சமாக இரு பிரதான கட்சிகளுக்கு இடையிலான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைந்திருந்தது. ஆனால், ஜனாதிபதி அதனை உதாசீனப்படுத்திவிட்டார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

மட்டு. கோயில்குளம் பகுதியில் இரு இளைஞர்கள் படுகொலை

மட்டக்களப்பு, பெப்.7

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயில்குளம் கங்கேயன் ஓடைப் பகுதியில் வைத்து இரு இளைஞர்கள் நேற்றுப் பிற்பகல் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அச்சுதன் கிருபயரட்ணம் என்பவரும் இந்திரன் என்று அழைக்கப்படும் சிவராமலிங்கம் கோவிந்தராஜ் என்பவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களது சடலங்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப் படைக்கப்பட்டுள்ளன. (த-9)

திருமலை - காங்கேசன் கப்பல் சேவை; நேற்று இரவுவரை முடிவு எதுவும் இல்லை

திருகோணமலை, பெப்.7

காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாவது குறித்து நேற்றிரவுவரை முடிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 13ஆம் திகதி திருத்த வேலைக்காக நிறுத்தப்பட்ட 'ஓஸானிக் கிறீன்' என்ற கப்பல் நேற்று 6ஆம் திகதி காங்கேசன்துறைக்கான கப்பல் சேவையை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கப்பல் கப்டன் வந்து சேராத காரணத்தால், கப்பல் சேவையை குறிப்பிட்டதினத்தில் ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

கப்பலில் பயணம் செய்வதற்காக திருகோணமலை வந்தடைந்த 200 இற்கும் மேற்பட்ட பயணிகள் நகரில் உள்ள ஆலயம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறியவந்தது.

இதேவேளை -

இக்கப்பலில் பயணம் செய்ய யாழ். அரச அதிபரால் சிபார்சு செய்யப்பட்டவர்

(04ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திரதின ஆயுதக் கண்காட்சியில் குண்டு வெடித்து 18 பேர் காயம்!

கொழும்பு, பெப். 7

நாட்டின் சுதந்திரதினத்தையொட்டி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கண்காட்சியில் நேற்று குண்டு வெடித்தது. படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட இந்த ஆயுதக் கண்காட்சியில் கைக்குண்டு ஒன்றை இயக்கும் விதம் குறித்து அதிரடிப்படை உத்தியோகத்தர் ஒருவர் பார்வையாளர்களுக்கு விளக்கமளித்துக்கொண்டிருந்த சமயம் எதிர்பாராத விதமாக அந்தக் குண்டு திடீரென வெடித்தது.

கண்காட்சி அரங்கினுள் - பார்வையாளர்கள் நிறைந்திருந்த சமயத்தில் - திடீரெனக் குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்தது. இதனால் கண்காட்சியைக் காண வந்திருந்தோர் கலவரமடைந்து நாலாபுறமும் தலைதெறிக்க ஓடினர்.

அதிரடிப்படையினர் இருவர், பௌத்த தேரர்கள் இருவர் உட்பட 18 பேர்வரை இந்தச் சம்பவத்தில் காயமடைந்திருக்கின்றனர்.

விசேட அதிரடிப்படையினர் இருவரும், பௌத்த பிக்குகள் இருவரும், பொதுமக்கள் 10 பேருமாக மொத்தம் 14 பேர் காயமடைந்தனர் என்று இராணுவப் பேச்சாளர்

(04ஆம் பக்கம் பார்க்க)

பண்டாரவளையில் 20 பேர் கைது

பண்டாரவளை, பெப்.7

பண்டாரவளையில் கடந்த 5 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களில் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் வாகனங்களை செலுத்தியபடி 14 பேரும், பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் நீதிமன்றத்தில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட இருவரும், தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத ஒரு வருமாக 20 பேர் சுற்றிவளைப்பில் கைது

(04ஆம் பக்கம் பார்க்க)

சிங்கள இடதுசாரி ஊடகவியலாளர் வெள்ளை வானில் கடத்தப்பட்டார்!

தொழிற்சங்கவாதிகள் இருவரும் அதே பாணியில் கடத்தல்

கொழும்பு, பெப்.7

தலைநகர் கொழும்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் மற்றும் ஊடகப்பணிபுரியும் தொழிற்சங்கவாதிகள் இருவர் ஆகியோர் ஒரே இரவில் வெள்ளைவானில் வந்த நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கடத்தல்கள் ஊடக மற்றும் தொழிற்சங்க சமூகத்தினரை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றன.

கடத்தல்களின் எதிரொலியாக தலைநகர ஊடக சமூகத்தினரும், தொழிற்சங்க வாதிகளும் நேற்று வீதியில் இறங்கி தங்கள் கடும் கண்டனத்தைஒன்றுதிரண்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

பிரபல இடதுசாரி பத்திரிகையான 'ஹிரு' வெளியீட்டின் முன்னாள் பத்திரிகையாளர் லலித் சேனவிரட்னவும், ரயில்வே தொழிற்சங்கத்தின் மாதாந்த வெளியீடான 'அக்குண' (இடி) சஞ்சிகையின் ஆசிரியர் சிசர பிரியங்க மற்றும் தொழிற்சங்க செயற்பாட்டாளரான நிஹால் சேரசிங்க ஆகியோரே நேற்றுமுன்தினம் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

'ஹிரு' பத்திரிகையாளரான லலித் சேனவிரட்னவின் இல்லத்துக்கு திங்கள் இரவு 9.30 மணியளவில் வெள்ளை நிற வானில்

(04ஆம் பக்கம் பார்க்க)

இடைத்தங்கல் முகாமில் தீ சிறுமி பரிதாப மரணம்!

மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேடர் குடியிருப்பு இடைத்தங்கல் முகாமில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற தீ விபத்தினால் சிறுமி ஒருத்தி பலியாகியுள்ளார்.

போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்து இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த ஏழு வயதான தர்சினி என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

திருகோணமலை முத்துச்சேனை கிரா

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலையில் கல்வி கற்று 2006 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவன்

செல்வன் ஜெ.சந்திரோதயன்

(138 புள்ளிகள்)

இவருடன் செல்வன் மா.அருள்ஸ்ரீபன்(125 புள்ளிகள்)செல்வன் த.ழூஜீன்(102 புள்ளிகள்) ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களுக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். (57801)

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வாழ்த்துகின்றோம்

பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டுவரை ஆரம்ப வகுப்பு விஞ்ஞானக் கல்வி ஆலோசகராகப் பணியாற்றிய திரு. என். சுவாமிநாதன் தற்பொழுது யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஆரம்ப வகுப்பு உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

நண்பர் என். சுவாமிநாதன் அவர்களின் ஓய்வுகால வாழ்க்கை நீடித்ததாகவும், நவீன கல்விக்கு உரமாகவும் அமையவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

கல்விக்கோட்டம்
வடமராட்சி,
பருத்தித்துறை.

வடமராட்சி கல்வி வலய
நண்பர்கள்.

முக்கிய அறிவித்தல்

கிருஷ்ணா அடகு கடை,

370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 5046

பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு(31.12.2005) முன்னர் அடகுவைத்து மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகள் யாவும் 2007 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 28 ஆம் திகதி (28.02.2007) விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

370,K.K.S. Road,
Jaffna. (57613)

A.S.சுரேந்திரன்
உரிமையாளர்.

7ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு
10
-
09
-
1975

இறப்பு
07
-
02
-
2000

(57784)

செல்வன் இராசரத்தினப் பத்தர் சுகந்தன்

ஆண்டுகள் ஏழு சென்றாலும் உன் நினைவுகளுடன் வாழும்:

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

- குடும்பத்தினர்
நேசம் அழகு நகை.

மரண அறிவித்தல்கள்

அருணாசலம் நவரத்தினம் (தும்பர்)

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல.68,கற்குழி,வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் நவரத்தினம் (தும்பர்) 05.02.2007 திங்கட்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, யோகேஸ்வரன்,கணேஸ்வரன், ரவீந்திரேஸ்வரன், கமலேஸ்வரி, துவாரகாதேவி, துவாரகாநாதன், நடனவடிவேல், காலஞ்சென்ற ரகு மற்றும் செல்வி, கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (57796)

தகவல்: ந.கணேஸ்வரன்
(சிவம் - மகன்).

செல்லத்துரை நிர்மலகாந்தன் (நிதி)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நிர்மலகாந்தன் 05.02.2007 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் சபாபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் பற்பராதேவியின் அன்புக் கணவரும் ஜீவிதா, கீர்த்தனா, கிதுஷா, கபில்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதிவிடமான கொக்குவில் மேற்கு வேம்படி முருகமூர்த்தி கோவிலடியில் உள்ள இல்லத்தில் இன்று(07.02.2007) புதன்கிழமை நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (57804)

தகவல்:
S.தவம்
(மைத்துனர்.)

பாராட்டி வாழ்த்துகிறோம்

2006ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த மகாராஜன் கலாவதி தம்பதிகளின் புதல்வி செல்வி ம.சங்கவி அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

சங்கவி

வாழ்த்துவோர்
அப்பப்பா, அப்பம்மா,
அம்மம்மா,
பெரியப்பா, பெரியம்மா,
ஆசையப்பா, ஆசையம்மா,
மாமாமார், மாமிமார்.

Kiri Pc System, Punnagam

தவறிவிட்டது

இராசலிங்கம் மாணிக்கதேவி(ஊரெழு கிழக்கு, சுன்னாகம் முகவரியுடையது) என்பவருடைய தே.அ.அட்டை, விசேட அ.அட்டை, வங்கிப் புத்தகம்(மக்கள் வங்கி), உதவிப் பண அட்டை, உணவுப் பங்கீட்டு அட்டை, சமுர்த்தி முத்திரை, திறப்புக்கோர்வை, மருந்துகள், சிறு தொகைப் பணம் என்பன அடங்கிய பை திருநெல்வேலியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் போகும் வழியில் 764 வழி இலக்க மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியிலோ அல்லது 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ ஒப்படைத்துதவவும். (57805)

தவறிவிட்டது

எமது வெளிக்கள உத்தியோகத்தர் காராள சிங்கம் சுரேன் என்பவரது மிகமுக்கியமான ஆவணங்கள் அடங்கிய கோவை ஒன்று யாழ்.நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Paramsothy Medical Clinic, 443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (57796)

கண்ணாடி தவறிவிட்டது

ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணியளவில் யாழ். மனோகரா சந்திக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து Dr.சக்திவேல், இணுவில், மஞ்சத்தடி எனும் முகவரியிலுள்ள வீட்டில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P - 0776116777 (57793)

தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு

DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.

ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு
தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

புத்திக்ளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகாலை முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Srambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publications) Jaffna

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களோடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 12/02/2007 - 09.00 AM

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 09/02/2007, 10/02/2007, 11/02/2007 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றது.

மரண அறிவித்தல்

தேவசகாயம் மரியதாஸ்

தேவசகாயம் மரியதாஸ் 16.01.2007 அன்று சவூதிஅரேபியாவில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (07.02.2007) புதன்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை கத்தோலிக்க சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

269/2, ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.
T.P:0262221415

தகவல்:
குடும்பத்தினர்.
(57803)

வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான தற்காலிக இணைப்பு விசாரணை நாளை

யாழ்ப்பாணம்,பெப்.7

வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்வி அலுவலர்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்குவது தொடர்பான விசாரணைகள் முன்கூட்டியே நாளை ஆரம்பமாகவிருக்கின்றன.

இவ் விசாரணைகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், விசாரணைகள் முன்கூட்டியே நாளை தொடக்கம் இடம் பெறும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த விசாரணைகள் நாளையும் -

16ஆம், 17ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த விசாரணைகள் எதிர்வரும் 14ஆம் திகதியும் - இடம் பெறவுள்ளன என்றும் -

14ஆம் திகதிக்குப் பின்னர் விசாரணை எதுவும் நடைபெறமாட்டாது என்றும் - பிராந்திய ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (1-4)

வதிரிச் சந்தியில் மினிமுகாம் அமைப்பு

வதிரிச் சந்தியிலுள்ள தனியார் வீடொன்றில் இராணுவத்தினர் மினிமுகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த திங்கள் முதல் அந்த வீட்டைச் சூழ பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (1-155)

புலமைப் பரிட்சை விண்ணப்பம்

கொழும்பு பிரபல ஆசிரியர் S.உதயச்சந்திரனின் தரம் 5 புலமைப் பரீட்சை - 2007க்குரிய ஜனவரிமாத வினாத்தாள் பெறலாம்.
✱ தபால் மூலமும் அனுப்பிவைக்கப்படும்.

கற்சுமி கல்வி நிலுவனம்
பரணி பொத்தகசாலை
நாவலர் வீதி - யாழ். தொ.பே: 0776510149

விற்பனைக்கு

கடைக்குரிய (நவீன சில்வர்) தளபாடங்கள், குழந்தைகளுக்கான உடைகள்/பராமரிப்பு பொருள்கள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு முன்னுரிமை.

தொ.பே.: 0717 556677 (57812)

விற்பனைக்கு

திண்டுக்கல் இரும்புப் பெட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 249, கே.கே.எஸ். றோட் [ரவுண்ட்], யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0776009901 (57812)

தவறிவிட்டது

தவபாலச்சந்திரன் றவிசங்கர் என்பவரது 871971307V இலக்கமுடைய தே.அ.அட்டை கே.கே.எஸ். வீதிக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 167, நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் கொடுத்தது உதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (57815)

யாழ்.மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவுச் சங்கம்

விசேட அறிவித்தல்

மீதிகளை உறுதிப்படுத்தல்

01.01.2005 - 31.12.2005 காலப்பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டு இருப்பதனால் அங்கத்தவர்கள் தமது பாஸ் புத்தகங்களை 08.02.2006, 09.02.2006 (வியாழன், வெள்ளி) ஆகிய இரு நாள்களிலும் சங்கப் பணிமனையில் ஒப்படைத்து தமது மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இ.இரத்தினசிங்கம்,
தலைவர்.

(சி/51989)

ச.தனபாலசிங்கம்,
செயலாளர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

காவெட்டி பிரதேச செயலக கருத்திட்ட சமுர்த்தி முகாமையாளரும், எமது சங்கத்தின் உறுப்பினருமான இராசரத்தினம் உதயகுமார் அவர்களின் அன்புத் தாய்

இராசரத்தினம் தருமநாயகி

08.01.2007 அன்று இறையடி சேர்ந்தமையை யிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம். (57772)

கண்ணீர் அஞ்சலி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பொருளாளர் த.ருகதாசன் அவர்களின் அன்புத் துணைவியார்

திருமதி மகேஸ்வரி ருகதாசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இல.106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி/51990)

தலைவர், ஊழியர்கள்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை கணேசு

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசு 06.02.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும் விக்னேஸ்வரனின் பாசமிகு தந்தையும் வனிதாவின் பாசமிகு மாமனும் விதுசன், விசானன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு ருக்குமணி, காலஞ்சென்ற இரத்தினம் நடராசா, காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற நவரெட்ணம்(சுவிஸ்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.02.2007) புதன்கிழமை முற்பகல்11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 33, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை. (57816)

தகவல்:
வி.ஜனேஸ்வரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

இலங்கையில் மனித உரிமைகள்: சர்வதேசத்தின் பரிசீலனையில்!

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரம் சர்வதேச ரீதியில் ஒலிக்கும் - கவனிக்கப்படும் - சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலின் செயலணிக் குழு ஒன்று நாளை மறுதினம் கூடி இலங்கை விவகாரம் குறித்து ஆராயஇருக்கின்றது.

அதேசமயம் அடுத்த மாதத்தில் கூடவிருக்கும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சிலின் கூட்டத் தொடரிலும் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் விவகாரம் விரிவாக ஆராயப்படவிருப்பதாக விடய மறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. மேற்படி கவுன்சிலின் ஆவணங்களின் படி கூட்டத் தொடரின் நான்காவது அமர்வின் போது - மார்ச் 12 ஆம் திகதிக்கும் ஏப்ரல் 5ஆம் திகதிக்கும் இடையில் - மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட விருக்கின்றது.

சட்டவிரோதமான விசாரணைகள் மற்றும் சட்ட முரணான மரணதண்டனைகள் போன்றவை தொடர்பான ஐ. நாவின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டன் 2005ஆம் ஆண்டு இறுதியில் இலங்கைக்கு வந்து, இலங்கை நிலைமை குறித்து நேரில் கண்டறிந்துள்ளார். அவர் மேற்படி ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சிலில் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பிரதான உரை ஒன்றை ஆற்றவிருக்கிறார்.

கடந்த வருடம் இலங்கை நிலைமை குறித்து அல்ஸ்டன் முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் 2006 ஓகஸ்டில் மட்டும் பெருமளவு மனித உரிமைகள் மீறப்பட்ட துன்பியல் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன என அவர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது. முக்கிமாக தமிழ் புத்திஜீவிகள் பலர் படுகொலை செய்யப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் ஆள்கள் காணாமற் போகின்றமை - முக்கியமாக வண. பிதா ஜிம் பிறவுண் வடக்கில் காணாமற் போனமை - மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17பேர் படுகொலை போன்ற மனித உரிமைகளை மலினப்படுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றமையை அவர் அம்பலப்படுத்தியிருந்தார்.

அதேபோல ஆயுதப் பிணக்குகளில் சிக்குண்டுள்ள சிறார்கள் தொடர்பான விடயங்களைக் கையாளும் - ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி - ராதிகா குமாரசுவாமியும் அடுத்த மாதம் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சிலின் கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து கருத்துகளை உள்ளார்.

ஏற்கனவே இவ்விடயத்தில் ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியான ராதிகா குமாரசுவாமியின் சார்பில் அவரது தூதுவர் அலன் றொக் இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த பின்னர் இங்கு மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பான தனது பூர்வாங்க அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதில், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் நடவடிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், கருணா குழுவினரும் ஈடுபடுகின்றனர் என்றும், இலங்கை அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கருணா குழுவினர் சிறுவர்களை வலோற்காரமாகப் படைக்குச் சேர்ப்பதற்கும், அவர்களுக்குப் பலவந்தமாக ஆயுதப்பயிற்சி கொடுப்பதற்கும் அரச படைகள் நேரடியாகவே உதவி செய்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கை இலங்கையில் பெரிய சர்ச்சையைக் கிளப்பியிருப்பதும் தெரிந்ததே.

சிறுவர்களைப் படைக்குத் திரட்டும் தரப்புகளுக்கு எதிராக கிரிமினல் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவேண்டும் என்றும் ராதிகா குமாரசுவாமியின் அலுவலகம் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியில் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பான ராதிகா குமாரசுவாமியின் உரை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் முக்கியமாக வன்முறைகள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படாதவிடத்து, ஐ. நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் இலங்கை நிலைமை தொடர்பாக விசேட பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு ஐரோப்பிய யூனியனும் ஆயத்தமாகி வருகின்றது. இவ்விவகாரத்தில் ஐரோப்பிய யூனியன் கடந்த மாதங்களில் எடுத்த முன் நடவடிக்கைகள், சற்றுக் கால அவகாசம் வழங்கும் விதத்தில் அப்போது ஒத்திவைக்கப்பட்டிருந்தன. இப்போது ஐரோப்பிய யூனியன் இதில் மும்முரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

ஐரோப்பிய யூனியனும் ஐநா. மனித உரிமைக் கவுன்சிலில் தனது பிரேரணையை முன்வைத்து காய் நகர்த்துமானால், அக்கூட்டத் தொடரில் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை விவகாரம் விரிவாக ஆராயப்படும் சாத்தியம் உருவாகும்.

இதேசமயம், நாளைமறுதினம் இடம்பெறவிருக்கும் ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலின் செயலணிக் கூட்டத்திலும் அலன் றொக் இலங்கை நிலைமை தொடர்பான தனது விவரமான அறிக்கையைச் சமர்ப்பித்து விளக்கமளிக்கவிருக்கிறார். இக்கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக எட்டப்படவிருக்கும் முடிவுகள், சிபார்சுகள், பரிந்துரைகள் என்பன ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலின் கவனத்துக்கும், பரிசீலனைக்கும், உரிய நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் இந்த நகர்வுகள் இலங்கையில் - குறிப்பாகத் தமிழ் தாயகத்தில் - மனித உரிமைகள் பேணப்படும் நிலைமையை மேம்பாடடையச் செய்யுமா? - இதுதான் மக்களின் ஆதங்கமிக்க கேள்வி. விடையைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

புலிகளின் பிரச்சினை வேறு; தமிழரின் விருப்பம் வேறு!

கருணாநிதிக்கு டக்ளஸ் கடிதம்

கொழும்பு, பெப். 7

புலிகளின் பிரச்சினை வேறு; தமிழர்களின் விருப்பம் வேறு. இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்துகொண்டு தமிழக முதல்வர் கருமம் ஆற்றவேண்டும்.

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா. இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ், கருணாநிதிக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஈழத்தமிழர்கள் எழுந்தால் எழுவதற்கும், அழுதால் அழுவதற்கும், உயிர் பிரிந்தால் உயிர் துடிப்பதற்கும் என்று தளம் கொடுத்த தலைமகன் நீங்கள். ஈழத்தமிழர்கள் விரும்பும் வாழ்வியல் உரிமையும், கொண்டிருக்கும் அரசியல் உணர்வையும் நீங்கள் அறியாதவர்கள் அல்லர். ஆனாலும், எமது மக்களின் குரலாக உங்கள் கவனத்திற்கு என்று கருதி இம்மடலை எழுதுகின்றேன்.

வெறும் உணர்ச்சிகளின் வேகமும் துப்பாக்கிகளின் மோகமும் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்த வேகமும் மோகமும் மக்கள் மீதான நேசம் என்று கருதி விடமுடியாது. இது தனியொரு குழுவின் இருப்புக்கான யுத்தமே ஒழிய மக்களின் விருப்புக்கான விடயமல்ல. வெல்லப்படமுடியாத ஒரு யுத்தத்தில் நாம் கொல்லப்பட வேண்டும் என்று எந்த இனமும் விரும்பாது.

பகுத்தறிவுப் பாசறையும் பட்டறிந்த அனுபவங்களும் கொண்டவர் கலைஞர் என்று ஈழத்தமிழர்கள் அறிவார்கள். ஈழத்தமிழர்களின் இன்றைய அவலம் தரும் வாழ்விற்கும் அச்சம் தரும் போருக்கும் யார் காரணம் என்பதை புரிந்திருப்பீர்கள்.

மக்களது பிரச்சினை வேறு; புலித் தலைமையின் பிரச்சினை வேறு! எமது மக்கள் அமைதிப் பூங்காவில் அரசியலுரிமை பெற்றவர்களாக அகமகிழ்ந்து வாழ விரும்புகிறார்கள். சம உரிமையோடு சமமான சகவாழ்வு காண விரும்புகிறார்கள்.

ஆனால், புலித் தலைமையோ வெல்லப்பட முடியாத யுத்தத்தை விரும்பி நிற்கிறது. அப்பாவி இளைஞர், யுவதிகளை கட்டாயப்படுத்தி அவர்களைப் போருக்குப் பலி கொடுத்து வருகின்றது.

இருதரப்பும் கொண்டிருக்கும் இரு வேறு பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு காரியமாற்ற கலைஞர் முன்வரவேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பம் ஆகும். யுத்தத்தால் யாரும் வெல்லமுடியாது. யுத்தம் தரும் அழிவுகளுக்கு யாரும் அர்த்தம் சொல்லமுடியாது. ஆகவே, அமைதித்தீர்வு அர்த்தமுள்ள ஓர் அரசியல் தீர்வு மட்டும்தான். அதற்காக நீங்கள் இனிவரும் காலங்களில் இன்னும் பல மடங்கு பங்காற்றுவீர்கள் என நான் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது கருணை கொண்ட கலைஞர், காரியம் முடிப்பார் என்பது எமது மக்களின் அசையாத நம்பிக்கை - என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

பான் விநியோகம் இன்று வழமைக்குத் திரும்புகிறது

யாழ்ப்பாணம், பெப்.7

கோதுமை மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து, பாணுக்கு ஏற்பட இருந்த தட்டுப்பாடு தவிர்க்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் நேற்றிரவு தெரிவித்தது.

யாழ். அரச அதிபரால் நேற்றுச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட கோதுமை மா தீவகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு உடனடியாக மாலையிலேயே விநியோகம் செய்யப்பட்டது.

இன்று வழமைபோல் பேக்கரிகள் பாண் விநியோகத்தை மேற்கொள்ளும் என்றும் - சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக பாண் உற்பத்தி நேற்று தடைப்பட்டிருந்தது.

யாழ். நகரப்பகுதியில் உள்ள ஒரு சில பேக்கரிகளில் மட்டுமே நேற்றுப் பாண் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் நகரப் பகுதி தவிர்ந்த வலிகாமம் தெற்கு, மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் நேற்றுமுதல் பாண் உற்பத்தி தடைப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரப் பகுதியில் உள்ள பேக்கரிகளிலும் நேற்று பாண் விற்பனை சில மணி நேரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

அரச அதிபரால் நேற்று மாவழங்கப்பட்டதால் இன்று முதல் பாண் விநியோகம் வழமை நிலைக்கு திரும்பும் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் நேற்றிரவு தெரிவித்தது. (அ-1-8)

மருந்து வகைகளை விநியோகிக்க பிரதேச பிரிவு தோறும் மருந்தகங்கள்

குருநகர், பெப்.7

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் தமக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலர் பிரிவுதோறும் ஒவ்வொரு மருந்தகம் (Pharmacy) இயங்க உள்ளது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக யாழ். அரச அதிபரால் தெரிவு செய்யப்பட்டுள்ள மருந்தகங்களில் மக்கள் தமக்குத் தேவையான மருந்து வகைகளைப்பெற வசதி செய்யப்படும் என்றும் -

குறிப்பிட்ட மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துகளை யாழ். ப.நோ. கூ. சங்கத்தின் மருந்தகம் ஊடாக விநியோகிக்க யாழ். அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதேச செயலர் ரீதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மருந்தகங்களின் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

சிறுநீரக நோயாளர் மற்றும் புற்றுநோயாளர்களுக்கான மருந்து வகைகளை மனிதாபிமான அடிப்படையில் தொடர்ந்து பெற்றுக் கொடுக்க சுகாதாரத் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-1-51)

சிவராத்திரி நாளன்று ஊரடங்கை முழுமையாக நீக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.7

சிவராத்திரி நாளன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கை முழுமையாக நீக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்துசமயப் பேரவை யாழ். அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்துக்களின் புனித தினமாகிய சிவராத்திரி தினம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. உலகில் வாழும் இந்துக்களால் கொண்டாடப்படும் இத்தினத்தில் யாழ். மாவட்டத்தில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டத்தை அன்றைய தினம் முழுமையாகத் தளர்த்த ஆவன செய்யவும் - என்று அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (அ)

அரச ஊழியருக்கு வாழ்க்கைச் செலவுப்படி; சுற்றுநிருபம் யாழ். வந்து சேர்ந்தது

தென்மராட்சி, பெப்.7

அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் ஆகியோருக்கு அதிகரித்த வாழ்க்கைச் செலவுப்படிகள் இந்த மாதம் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சுற்றுநிருபம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபப்பிரகாரம் அரச அலுவலர்கள் ஆயிரத்து 750 ரூபாவினையும் ஓய்வூதியர்கள் 875 ரூபாவினையும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பெறவுள்ளனர்.

அரச அலுவலர்களுக்கு 375 ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு 187 ரூபா 50 சதமும் அதிகரிப்பாக பெறவுள்ளனர்.

ஏற்கனவே அரச அலுவலர்கள் கடந்த 2006 ஜனவரியில் ஆயிரம் ரூபாவும் 2006 ஜூலையில் 375 ரூபாவும் ஓய்வூதியர்கள் 2006 ஜனவரியில் 500 ரூபாவும் ஜூலையில் 187 ரூபா 50 சதமும் வாழ்க்கைச் செலவுப்படியாக பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மீன் பிடிக்க அனுமதி

குருநகர், பெப்.7

குருநகர் மீனவர்கள் குடாக் கடலில் மீன்பிடிக்கப் படையினரால் நேற்று அனுமதிக்கப்பட்டனர். சுதந்திர தினமான கடந்த 4ஆம் திகதியும் மறுநாள் 5ஆம் திகதியும் மீனவர் [illegible] தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. (51)

நாளை

தை - 25
வியாழக்கிழமை
08.02.2007
திதி: சஷ்டி
முன்னிரவு : 10.14
நட்சத்திரம் : சித்திரை
முன்னிரவு : 08.26
சுபநேரம் : 08.05 - 09.35
ராகுகாலம் : 02.05 - 03.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டின் ட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

குடும்பஸ்தருக்கு அச்சுறுத்தல்

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்டவரின் சகோதரரை படையினர் கைதுசெய்து தடுத்து வைத்திருந்தவேளை அவர் தப்பிச் சென்றுவிட்டார். அதனைத் தொடர்ந்து பிரஸ்தாப நபருக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-வ-4)

குடும்ப அட்டைகள் மீளாய்வு இறுதிச்சந்தர்ப்பம்

தென்மராட்சி. பெப்.7

தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் சாவகச்சேரி, கைதடி பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பங்கீட்டு அட்டை மீளாய்வுகளில் இதுவரை மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டைகளை நாளை மறுதினம் பிரதேச செயலகத்தில் மீளாய்வு செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீளாய்வு செய்யப்படாத பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் குடும்ப உறுப்பினர்கள் தமது தேசிய அடையாள அட்டை பங்கீட்டு, அட்டை ஆகியவற்றுடன் தத்தமது பிரிவு கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தையும் கொண்டு வருமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீ நிவாசன் கேட்டுள்ளார்.

மருந்து விநியோகம்

யாழ். சுகாதார திணைக்களத்தில் பதிவு செய்து பணம் செலுத்தியவர்கள் தங்களுக்குரிய மருந்துகளை நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

இந்து சமயிகள் விண்ணப்பிக்கலாம்

கதிர்காமம் இந்து யாத்திரிகள் விடுதிகள் முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல், வர்த்தகம், பொருளியல் ஆகிய பாடங்களுள் ஒன்று உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் அல்லது உயர்தரத்தில் இந்து சமயத்தில் சித்திபெற்றவராகவும் இந்து சமயத்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்பாக ஜனவரிமாதம் 12ஆம் திகதிய வர்த்தமானி அறிவறுத்தலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு இந்து சமய அலுவல்கள் கலாசார திணைக்களத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

தரம் 7 மாணவர்களுக்கு பாடநூல்கள் இல்லை

தென்மராட்சி. பெப்.7

பாடசாலைகளில் தரம் 7 இல் கற்கும் மாணவர்களுக்கான பாட நூல்கள் கிடைக்காததால் தமது பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைவதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

கடந்த வருடம் தரம் 7 மாணவர்களுக்கான பாட நூல்கள் விநியோகிக்கப்படாததால் இவ்வருடம் தரம் 7 இல் கற்கும் மாணவர்கள் கல்வி நடவடிக்கையினை தொடர முடியாத நிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்தனர்.

இரு தடவைகள் கப்பலில் பாடநூல்கள் கொண்டு வரப்பட்ட போதிலும் தரம் 7 வகுப்புகளுக்கு பாடநூல்கள் எதுவும் கொண்டுவரப்படவில்லை எ.. வும் தெரிவித்தனர்.

அமைச்சர்களே வீதியில் செல்லமுடியாத நிலை மனம் வெதும்புகின்றார் அமைச்சர் ஜெயராஜ்!

அவரது காரையே தட்டித் தர்பார் நடத்தினராம் பொலிஸார்

அமைச்சரொருவருக்குக் கூட இன்று வீதியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்படியென்றால் சாதாரண மக்களின் நிலை என்ன?

நேற்று நாடாளுமன்றில் - இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஆளும்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

நேற்று நாடாளுமன்றம் சபாநாயக்கர் ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியபோது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சிறப்புரிமைப் பிரச்சினை யொன்றை எழுப்பி உரையாற்றினார். அவர் அங்கு கூறியதாவது:-

இன்றுகாலை பௌத்தலோகமாவத்தை வழியாக நான் நாடாளுமன்றத்துக்கு எனது வாகனத்தில் வந்துகொண்டிருந்தேன். அச்சமயம், எனக்குப்பின்னால் வாகனத் தொடரணி ஒன்று வந்தது. இந்த வாகனத்தொடரணிக்கு முன்னிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் அதிகாரிகள் தகாத வார்த்தைகளால் ஏசிய வண்ணம் எமது காரை தட்டித்தாக்கினர். இதுகுறித்து விசாரணை நடத்தவேண்டும்.

வாகனத்தொடரணியில் வந்தவர் ஓர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருக்கவேண்டும். அல்லது பிரதியமைச்சராக இருக்கவேண்டும். நாடாளுமன்றத்துக்கு வந்துகொண்டிருக்கும் எம்.பி யொருவரையோ அமைச்சரொருவரையோ தடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். நான் எனது வாகனத்தில் வந்துகொண்டிருக்கும்போது இந்த வாகனத் தொடரணி எனது வாகனத்தை முந்திச் செல்லமுயன்றபோதே தொடரணிக்கு முன்னால் சென்ற பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொண்டனர். இத்தனைக்கும் எனது வாகனத்தில் கறுப்புக் கண்ணாடிகள் போடப்பட்டிருக்கவில்லை. நான் வாகனத்தில் அமர்ந்திருப்பதை பார்க்கக் கூடியதாகவே இருக்கும்.

நான் உடனடியாக இச்சம்பவம் குறித்து ஜனாதிபதியின் செயலாளருக்கு தொலைபேசிமூலம் தெரிவித்தேன். பொலிஸ் மா அதிபருடன் தொலை பேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன். அவர் குளித்துக் கொண்டிருக்கின்றார் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இருந்தும் அவர் அதன்பின் இதுவரை என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை.

இதேவேளை, நேற்று சரணவீதி முழுதாக மூடப்பட்டிருந்தது. எனது வீடு அந்த வீதியில்தான் இருக்கிறது. நேற்று வாகனங்கள் சரணவீதியால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் எனது நாளாந்தக் கடமைகள் பாதிக்கப்பட்டன. இதுகுறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும் - என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (உ)

அரசில் எத்தனை கட்சிகள் சபாநாயகருக்கே தெரியாதாம்!

அரசில் எத்தனை கட்சிகள் அங்கம் வகிக்கின்றன என்பது எனக்கே தெரியவில்லை என்று சபாநாயகர் ஜே.எம். லொக்கு பண்டார நாடாளுமன்றத்தில் நேற்று கூறினார்.

ஆளும் தரப்பில் இப்பொழுது எத்தனை கட்சிகள் இருக்கின்றன. அக்கட்சிகளின் தலைவர்கள் யாவர் என்பதை சபாநாயகர் சபையில் அறிவிப்பாரா? என எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோஸப் மைக்கல் பெரேரா கேள்வி எழுப்பினார்.

"ஐயா தெரியாதையா. இப்போது எத்தனை கட்சிகள் இருக்கின்றன என்பது எனக்கே தெரியவில்லை, அறிந்து கூறுகின்றேன்" என்றார் சபாநாயகர்.

என்றாலும்கூட ஆசன ஒதுக்கீடு தொடர்பாக மாலையில் நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பேசித் தீர்க்கலாம் என ஆலோசனை ஒன்றையும் சபாநாயகர் முன்வைத்தார்.

அனுராவுக்கு கொலை அச்சுறுத்தலாம்

ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட்டால் தன்னை கடத்திச் சென்று மின்கம்பத்தில் தொங்கவிடப்போவதாக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவுக்கு தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக அவரே ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

தமது தொலைபேசிக்கு மூன்று தடவைகள் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் கொலை மிரட்டல் பாணியில் கதைத்தார் எனவும் - மூன்றாவது தடவை குறித்த நபர் தன்னைத் திட்டித் தீர்த்தார் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று அமைச்சர் மங்கள சமரவீரவையும் மாத்தறைப் பகுதியில் மின்கம்பத்தில் தொங்கவிடப்போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அனுரா கூறினார்.

இதனை ஒரு விளையாட்டாகக் கருத முடியாது எனத் தெரிவித்த அமைச்சர், இதுகுறித்து அமைச்சர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தாம் முறையிட்டுள்ளார் என்றும் சொன்னார். (த-9)

பண்டாரவளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர் எனவும் - இவர்களில் ஒருவர் மட்டுமே தமிழர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். பண்டாரவளைப் பகுதியின் பாதுகாப்புக்கருதியே இந்த சுற்றிவளைப்பு இடம் பெற்றதாக ஊவா மாகாண பிரதி பொலிஸ் அதிபர் டி.ஜே. மிஸ்கின் தெரிவித்தார். (த-123)

திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை, கப்பல் தொடர்பான அறிவிப்பு வந்தவுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வருமாறு சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கப்பலில் செல்வதற்கான இலக்க அட்டைகள் (ரோக்கன்) எதுவும் நேற்று வழங்கப்படவில்லை என்றும் - கப்பல் காங்கேசனில் இருந்து புறப்படுவது உறுதி செய்யப்பட்டபின்னர்முன்னுரிமை அடிப்படையில் பயணிகள் தெரிவு செய்யப்படுவர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இடைத்தங்கல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தில் வசித்துவந்த இச்சம்பவ குடும்பம் சமீபத்தில் அங்கிருந்து இடம்பெயர்ந்து வாகரைப் பிரதேசத்தில் தஞ்சமடைந்திருந்தது. இக்குடும்பம் தங்கியிருந்த கூடாரத்தில் எரிந்துகொண்டிருந்த மெழுகுதிரி சரிந்து விழுந்ததில் அந்தக் கூடாரத்தில் தீ பரவி அது எரிந்து நாசமாகியது.

இத் தீ விபத்தில் தர்சினியின் தந்தையான கீதாம்பரம் (வயது- 63) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் முழு அதிகாரம் உடையவராகவும் ஜனாதிபதி புஷ், வெளிவிவகார அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் அம்மையார் ஆகியோருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளத் தக்கவராகவும் ஓர் உயரதிகாரி இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட வேண்டுமென அவர்கள் கோரியிருக்கின்றனர்.

"எந்நேரமும் மோசமடைந்துவரும் இலங்கையின் களநிலைவரம் குறித்து நாங்கள் ஆழ்ந்த குழப்பமடைந்துள்ளோம். அதனால்தான் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்கும்படி உங்களை வேண்டுகின்றோம்." - என அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

"இலங்கையில் மீண்டும் அதிகரித்துள்ள வன்செயல்களும் உயர்ந்துவரும் படுகொலை எண்ணிக்கையும், ஏற்கனவே சிதறும் நிலையில் இருக்கும் சமாதான நடவடிக்கைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு சிவில் யுத்தமொன்றுக்குள் நாட்டை மீளத் தள்ளிவிடும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன. மேலும், அங்கு ஆட்கடத்தல்கள் பெருமளவில் அதிகரித்திருக்கின்றமை எங்களை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது. பெரும்பான்மையான ஆட்கடத்தல்கள் தீர்க்கப்படாமல் மர்மநிலையில் நீடிக்கின்றது" - என்றும் அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (உ)

நிரந்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும்வகையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைத் தம்பக்கம் சேர்த்துக் கொண்டதுடன் அவர்களை அமைச்சர்களாகவும் ஆக்கிக்கொண்டார்.

ஜனாதிபதியின் இச்செயல் இரு கட்சிகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் ஒரு நடவடிக்கையாகும்.

நமது நாட்டில் மக்களே மக்களுக்கு எதிராகச் செயல்பட்ட காரணத்தாலேயே இனப்பிரச்சினையும் நாட்டில் பிரிவினைக் கோரிக்கையும் பிறப்பெடுத்தன.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தப்படாவிட்டால் நாட்டில் அமைதியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியாது. எனவேதான், நாட்டின் நலன் கருதி ஜனாதிபதியுடன்ஒப்பந்தம்செய்துகொண்டதன் மூலம் அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க முன்வந்தோம்.

சர்வகட்சி மாநாட்டின் பிரமுகர்கள் குழுவினால் இனப்பிரச்சினை தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாக ஆராய்ந்து நாமும் பல ஆலோசனைகளை உள்ளடக்கிய அறிக்கையையும் சமர்ப்பித்தோம்.

பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கினோம்

எமது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினோம்.

மக்களுக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் நாட்டில் ஏற்பட்ட உயிர் இழப்புகளும், சேதமாக்கப்பட்ட உடைமைகளும், இவற்றை எல்லாம்விட பெறுமதியான அமைதியும் கணக்கிட முடியாதவை.

எதிர்காலத்தில் இப்படியான துர்ச் சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்ற உயர்ந்த நோக்குடனேயே ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டோம்.

ஜனாதிபதியுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுகளை நடத்தி தீர்வுக்கு அடித்தளம் இட்டோம்.

நாட்டில் நிரந்தரமான அமைதியையும் உறுதியான நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட பொன்னான ஒரு சந்தர்ப்பத்தை இப்பொழுது இழந்துவிட்டோம்.

ஜனாதிபதியின் தன்னிச்சையான இச்செயல் ஐக்கிய தேசியக் கட்சியை மட்டுமல்ல, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளையுமே சங்கடநிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது.

அர்த்தபுஷ்டியான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜனாதிபதி உறுதிப்படுத்திவிட்ட நிலையில் தொடர்ந்தும் எம்மால் அரசுக்கு ஆதரவு வழங்க முடியாது.

அதேவேளை, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், ஐக்கிய சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்பவும் ஐக்கிய தேசியக் கட்சி திடசங்கற்பம் கொண்டுள்ளது. -எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

சுதந்திரதின ஆபத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க உறுதி செய்தார்.

'தேசத்தின் மகுடம்' எனப் பெயரிடப்பட்ட இந்தக் கண்காட்சி கடந்த நான்காம் திகதி சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கில் படையினர் மேற்கொண்ட புலிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வாகரையில் கைப்பற்றப்பட்ட பீரங்கிகள், ஷெல்கள், மோட்டார் குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களும், வெடி பொருள்களுமே இக்கண்காட்சியில் அதிகம் இடம் பிடித்திருந்தன என்று கூறப்படுகிறது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் காரணமாக கண்காட்சி இடையில் நிறுத்தப்படுமா? என்று பிரதி பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான ரியென்ஸி பெரேராவைத் தொடர்புகொண்டு கேட்டபோது, குறிப்பிட்ட திகதிவரை இக்கண்காட்சி தொடர்ந்து நடைபெறும் என்று அவர் கூறினார். (ஐ)

சிங்கள இடதுசாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் தங்களை சி.ஐ.டியினர் என்று கூறிவிட்டு அவரைக் கடத்திச் சென்றுள்ளனர் என அவரது மனைவி அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருக்கிறார்.

ஏனைய இருவரான நிஹால் சேரசிங்க (வயது-40), சிசர குமார பிரியங்க (வயது -38) ஆகியோர் வெவ்வேறு இடங்களில் வைத்து அன்றைய தினம் ஒரே சமயத்தில் கடத்தப்பட்டபின் காணாமற்போயிருக்கின்றனர்.

வேலை நிறுத்தத்தில் குதிக்க முஸ்தீபு

இவர்களை உடனடியாக விடுவிக்காவிட்டால் அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஒன்றுதிரட்டி நாடளாவியரீதியில்வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக தொழிற்சங்கங்கள் அரசிற்கு எச்சரித்துள்ளன.

இக்கடத்தல்களைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கொழும்பு புறக்கோட்டை ரயில்வே நிலையத்திற்குமுன்பாக இடம்பெற்றது. ஊடக அமைப்புகளையும் தொழிற்சங்கங்களையும் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

ரயில்வே தொழிற்சங்கம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், சம்பளமீளாய்வு தொழிலாளர் சங்க ஒன்றியம் ஆகிய தொழிற்சங்கங்களும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்கம், ஊடக அமைப்புகளும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகிய ஊடக அமைப்புகளும் காணாமற்போனோரைத் தேடி அறியும் குழுவுமே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அமைப்புகளாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது உரையாற்றிய தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இக் கடத்தல் சம்பவத்திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தொழிற்சங்கத்தினர் மீதும் ஊடகவிய லாளர்கள் மீதும் அரசு திட்டமிட்டு தாக் குதல் நடத்துகிறது என்றும் கூறினார்.

சம்பள அதிகரிப்பை ஆதரித்து வழக்குத் தொடர்ந்ததில் பங்காற்றியவர்கள்

இவர்களைஉடனடியாகவிடுதலைசெய்யாவிட்டால் அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர்கள் அரசிற்கு எச்சரித்துள்ளனர்.

ரயில்வே தொழிற்சங்கத்தின் வெளியீடான 'அக்குண' பத்திரிகையுடன் தொடர்புடைய இந்த மூவரும் மர்மமான முறையில் கடத்தப்பட்டிருப்பது குறித்து ஊடக அமைப்புகள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளன.

சுதந்திர ஊடக இயக்கம், சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் ஆகியன இக்கடத்தல்களைக்கண்டித்திருப்பதுடன் உடனடியாக மூவரதும் பாதுகாப்பை உறுதி செய்யும்படி இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றன.

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின்சம்பளம்நூறுவீதத்துக்கு அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பதை ஆட்சேபித்து அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று அண்மையில் தாக்கல் செய்யப்பட்டமை தெரிந்ததே. இந்த உரிமை மீறல் மனுத்தாக்கல் தொடர்பான செயற்பாட்டில் ரயில்வே ஊழியர் தொழிற் சங்கம் தீவிர பங்காற்றியிருந்தது. இந்த தொழிற் சங்கத் தின் வெளியீட்டுக் குழுவில் பணியாற் றும் மூவரே கடத்தப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN AutoCAD
DIPLOMA IN C"
தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
Start on:07.10.02.07

NEW A.A.C
Accadamy of Arts and Commerce
Chunnakam
Spoken English with Grammer
BY: Britto .
ஆரம்பம் - பிரிவு II (57809)
காலம்: 07-02-2007 நேரம்: 3p.m.

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 11-02-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, பாஷையூர்.
(பரியோவான்சந்தி அருகே)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.